Lions Club of

# Erode Supreme

Official Bulletin - Sep - Oct 2022



GEM HOSPITAL

# EXCLUSIVE DEPARTME FOR

# ROBOTIC CANCER SURGERY

IMUM CURE






To know more visit

***robotic.gemhospitals.com***

## A new era in Cancer Care

45, Pankaja Mill Road, Ramanathapuram, Coimbatore - 641 045

# தலைவர் உரை



அன்புமிக்க அரிமாக்களுக்கு எனது அன்பு கலந்த வணக்கம்.

நமது சங்கத்தின் இரண்டாவது இதழ் மூலம் எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி! நமது சங்க Orientation நிகழ்வு Trainer அரிமா Dr.தமிழ்ச்செல்வன் அவர்களால் 16 உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நமது சங்கம் ஒளிரும் காலமங்களம் ஃபவுண்டேஷனுடன் இணைந்து கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 40 CCTV கேமராக்களை பொருத்தி, ஆளுநர் அரிமா KR.முத்தையா அவர்களால் திறப்பு விழா செய்யப்பட்டது. விழாவிற்கு PDG அரிமா D.ரவிச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவரும் அரிமாக்களும் கலந்து சிறப்பித்தனர். சிறப்பான ஏற்பாடுகளை செய்த PP அரிமா P.ஆனந்த் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றிகளும், பாராட்டுக்களும். மலைவாழ் மக்களுக்கு தன்னலமற்ற சேவையை சிறப்பாக செய்து வரும் சேவை செம்மல் திரு.V.P.குணசேகரன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நமது சங்கம் கில்ட் அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தும் சுப்ரீம் பேச்சாளர் பேச்சு போட்டியில் முதல் பரிசு ரூ.10,000 இரண்டாம் பரிசு ரூ.5000 மூன்றாம் பரிசு ரூ.3000 சான்றிதழ், கேடயமும் வழங்கப்பட்டது. அக்னி ஸ்டீல்ஸ் K.தங்கவேல், வீனஸ் மார்க்கெட்டிங் நிறுவனம், சாரல் குடிநீர் நிறுவனம், ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அரிமா G.N.சித்தார்த்தன், அரிமா S.ஜெகநாதன் சிறப்பு விருந்தினர் PDG, S.மணி மற்றும் அரிமாக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுகளும், வேளாளர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் லியோ கிளப் பதவியேற்பு நடத்தப்பட்டது. PDG P.சந்திரசேகரன் புதிய நிர்வாகிகளையும் RC அரிமா PK.சரவணன் புதிய உறுப்பினர்களையும் பதவியில் அமர்த்தினர். லியோ DC அரிமா S.பழனியாண்டி கல்லூரி செயலர் முதல்வர் மற்றும் கலந்து கொண்டனர். பொருளீட்டு திட்டமான பட்டாசு விற்பனைக்கு முன் பணமாக ரூ. 8,00,000 நமது அரிமாக்கள் மனமுவந்து கொடுத்துதவியவர்களுக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்த அரிமா S.அசோக்குமார் அரிமா M.ரமேஷ்குமார் அரிமா PK.சரவணன், அரிமா S.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட அனைத்து அரிமாக்களுக்கும் பாராட்டுக்கள். இனிப்பு விற்பனைக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்த அரிமா M.கார்த்தி அரிமா R.பாலசுப்பிரமணியம், அரிமா S.பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும், நம் மாநகர மேயர் திருமதி. S.நாகரத்தினம், PID அரிமா K.தனபாலன், பட்டயதலைவர் அரிமா K.குமாரசாமி மற்றும் தினமும் வந்து மனமுவந்து சேவை புரிந்த அனைத்து அரிமாக்களுக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.

மேலும், எல்லா நிகழ்வுகளுக்கும் அச்சாணியாக இருந்து சிறப்பாக இயக்கி வரும் PID அரிமா K.தனபாலன், PDG அரிமா D.ரவிச்சந்திரன் ஆகியோருக்கு எனது நன்றியும் பாராட்டுக்களும்.

என்றும் அன்புடன்

அரிமா M.**ராமசாமி** ஆசிரியர்

# செயலர் அறிக்கை

அன்பு அரிமாக்களே!

இரண்டாவது சங்க இதழின் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். உங்களுடைய மேலான ஒத்துழைப்பு, பொருளுதவியினாலும் கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சிசிடிவி கேமரா திறப்பு விழா, 28ம் ஆண்டு மாநில அளவிலான சுப்ரீம் பேச்சாளன் பேச்சுப் போட்டி, இளம் அரிமா சங்கப் பதவியேற்பு விழா, ஏற்காட்டில் குடும்பத்தோடு குதூகலம், தன்னலமற்ற சேவைக்கு பாராட்டு விழா, பொருளீட்டு திட்டமான இனிப்பு மற்றும் பட்டாசு விற்பனை போன்ற நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

வரும் காலங்களில் நிகழ்முறை கூட்டங்களுக்கும் சேவை திட்டங்களுக்கும் தங்களுடைய முழு ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம். 324E மாவட்டத்தின் பெருமைமிக்க நமது சங்கமானது ஆளுநரின் முதலாவது காலாண்டு விருதினை பெற்றுள்ளோம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



அரிமா **N.வஜ்ரவேல்**
செயலாளர் நிர்வாகம்



அரிமா **P.ரமேஷ்**
செயலாளர் சேவை

| நாட்கள் | நிகழ்வுகள் |
|---|---|
| 01.09.22 | ஐந்தாவது நிகழ்மறைக் கூட்டம் (CQI, LEADERSHIP) |
| 08.09.22 | ஓரியண்டேஷன் |
| 10.09.22 | மூன்றாவது இயக்குனர்கள் குழு கூட்டம் |
| 11.09.22 | குடும்பத்தோடு குதூகலம் |
| 15.09.22 | ஆறாவது நிகழ்முறைக் கூட்டம் |
| 19.09.22 | கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா திறப்பு விழா |
| 03.10.22 | நான்காவது இயக்குனர்கள் குழு கூட்டம் |
| 06.10.22 | 7வது நிகழ்முறைக் கூட்டம் (தன்னலமற்ற சேவைக்கு பாராட்டு விழா) |
| 16.10.22 | 28ம் ஆண்டு சுப்ரீம் பேச்சாளன் தகுதிச்சுற்று |
| 17.10.22 | இளம் அரிமா சங்கம் பதவியேற்பு விழா VETIAS |
| 17.10.22 | பட்டாசு விற்பனை அரங்கு துவக்க விழா |
| 20.10.22 | 28ம் ஆண்டு சுப்ரீம் பேச்சாளர் இறுதிச்சுற்று |
| 20.10.22 | இனிப்பு விற்பனை அரங்கு திறப்பு விழா |

# நல்லதொரு குடும்பம்
# 5 வது நிகழ்முறைக் கூட்டம்

*1.9.2022* அன்று நமது ஐந்தாவது நிகழ்முறை கூட்டத்தில் சங்க மேம்பாட்டு பயிற்சி (CQI) தலைமை பண்பு பயிற்சியாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார். கூட்டத்தில் உலக அமைதிக்கு ஒரு நிமிட மௌனம் கடைபிடிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர். சென்ற கூட்ட குறிப்புகளை செயலர் வாசித்தார். பின்னர் தலைமை பண்பு பயிற்சியை அரிமா P.K.சரவணன் அவர்களும் சங்க மேம்பாட்டு (CQI) பயிற்சியை GLT உறுப்பினர் அரிமா V.கோபி அவர்களும் எடுத்தனர். மாவட்ட ஆளுநர் திட்டங்களும் சங்க செயல்பாடுகளை பற்றியும் அரிமாக்களிடம் கலந்துரையாடல் நடைபெற்றது.

சிறப்பு பயிற்றுநர் அரிமா D.ஆர்த்தி அவர்கள் "மகிழ்ச்சியான இல்லம்" பற்றி அரிமாக்களுக்கு பயிற்சி அளித்தார். அரிமாக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். குடும்பத்தோடு குதூகலம் திட்ட தலைவர் அரிமா P.மாணிக்கம் அவர்கள் சிறப்புரையாற்றினார். வருகைப்பதிவு குழுக்கள் முறையில் அரிமா S.வாசுகி அரிமா S.சிவதாஸ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. செயலர் நன்றி கூற தலைவர் கூட்டத்தை முறைப்படி ஒத்தி வைத்தார்.









# இயற்கை அறம்
# 6 வது நிகழ்முறைக் கூட்டம்

15.9.2022 அன்று ஆறாவது நிகழ்முறைக் கூட்டமானது இரத்த வங்கி அரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் சூழலியாளர் திரு. ஒசை காளிதாசன் அவர்களை மேடைக்கு அழைத்த பின் தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார். புதிய உறுப்பினர் King பாலா அவர்கள் சங்கத்தில் இணைக்கப்பட்டார் அவரை அறிமுகம் செய்தவர் அரிமா V.சுகுமாரன் அவர்கள்.




கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர். சென்ற கூட்ட குறிப்புகளை செயலர் சேவை அரிமா P.ரமேஷ் அவர்கள் வாசித்தார். அரிமா தனலட்சுமி பாலசுப்ரமணியம் அவர்கள் சிறப்பு விருந்தினரை அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.



சிறப்பு விருந்தினர் சூழலியளாளர் திரு.ஒசை காளிதாசன் அவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தலைவர் அவர்கள் அறிவிப்புகளை வாசித்தார். கூட்டத்தில் கண்தானம் பெற உதவிய அரிமாக்கள் கௌரவிக்கப்பட்டார்கள். வருகை பதிவு குலுக்கலில் அரிமாட்டி V.இந்துமதி, அரிமா K.ஆறுமுகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.




கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் செயலர் அவர்கள் நன்றி கூறிய பின் தலைவர் ஆறாவது நிகழ்முறை கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார்.



## ஊருக்கு உழைத்திடல்...

# 7 வது நிகழ்முறைக் கூட்டம்

6.10.2022 அன்று ஏழாவது நிகழ்முறை கூட்டமானது தன்னலமற்ற சேவைக்கு பாராட்டு விழாவாக நடைபெற்றது தாராபுரம் மத்திய அரிமா சங்க பொறுப்பாளர்கள், மாவட்ட அமைச்சரவை பொறுப்பாளர்கள் சிறப்பு விருந்தினர்களை மேடைக்கு அழைத்த பின் தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார். கூட்டத்தில் உலக அமைதிக்கு ஒரு நிமிட மௌனம் கடைபிடிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர். சென்ற கூட்ட குறிப்புகளை செயலர் அரிமா N.வஜ்ரவேல் அவர்கள் வாசித்தார். தலைவர் அரிமா G.சண்முகநாதன் அவர்கள் துவக்க உரையாற்றினார். அரிமா சிவலட்சுமி சரவணன் அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

ட்ரைபல் பவுண்டேஷன் திரு.உ.அ.அன்புராஜ், செயலர் ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் அரிமா S.கணேசன் அவர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர் அரிமா Dr.M.தங்கராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள் தன்னலமற்ற சேவை ஆற்றி வரும் V.P.குணசேகரன் அவர்களை பாராட்டிய பின் ஏற்புரையாற்றினார்.

தலைவர் அவர்கள் அறிவிப்புகளை வாசித்தபின் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் செயலர் நன்றி கூறிய பின் தலைவர் ஏழாவது நிகழ்முறை கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார்.












## வானம் வசப்பட

# 8 வது நிகழ்முறைக் கூட்டம்

28ம் ஆண்டு மாநில அளவிலான சுப்ரீம் பேச்சாளன் பேச்சு போட்டியின் இறுதிச்சுற்று 20.10.2022 அன்று நடைபெற்றது. நடுவர்கள் திரு.ரவிக்குமார், திருமதி. மனோரஞ்சிதம், திருமதி.ராணி மேடைக்கு அழைத்த பின் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார். தலைவர், கூட்டத்தில் உலக அமைதிக்கு ஒரு நிமிடம் மௌனம் கடைபிடிக்கப்பட்டது. வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர். சென்ற நிகழ்முறை கூட்ட குறிப்புகளை செயலர் அரிமா N.வஜ்ரவேல் அவர்கள் வாசித்தப்பின் மேடை நடுவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. தகுதிச்சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 போட்டியாளர்கள் "வெள்ளைத்தனையது மலர் நீட்டம்" என்ற தலைப்பில் பேசினார்கள்.





சிறப்பு விருந்தினர் முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா S.மணி அவர்கள் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசு தொகையும் கோப்பைகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர், மற்றும் நடுவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. இனிப்பு விற்பனை திட்டத் தலைவர் அரிமா R.பாலசுப்ரமணியம், பட்டாசு விற்பனை திட்ட தலைவர் அரிமா S.அசோக்குமார் ஆகியோர் பொருளீட்டு திட்டம் பற்றி எடுத்துரைத்தார்கள். சுப்ரீம் பேச்சாளன் திட்டத் தலைவர் அரிமா G.N.சித்தார்த்தன் அவர்கள் நன்றியுரை கூறினார். தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார்.







## சங்க நாதம்

# சுப்ரீம் பேச்சாளன்

சுப்ரீம் அரிமா சங்கம், கில்ட் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய 28 ஆம் ஆண்டு மாநில அளவிலான சுப்ரீம் பேச்சாளன் பேச்சுப்போட்டியின் தகுதிச்சுற்று 16.10.2022 அன்று சுப்ரீம் இரத்த வங்கி அரங்கில் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 84 பதிவுகள் பெறப்பட்டிருந்தன. பட்டய தலைவர் அரிமா K.குமாரசாமி மற்றும் முன்னாள் மண்டல தலைவர் அரிமா K.தமிழ்ச்செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க போட்டியின் துவக்க நிகழ்வில் அறக்கட்டளையின் தலைவர் அரிமா G.செந்தில் அறக்கட்டளையின் பணிகளை விளக்கினார். போட்டியில் 8 நபர்கள் இறுதிச்சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன. 20.10.2022 அன்று நடைபெற்ற சுப்ரீமின் 8 வது நிகழ்முறை கூட்டத்தில் போட்டியின் இறுதிச்சுற்றில் முன்னாள் மாவட்ட ஆளுநர் S.மணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். முதல் பரிசு பெற்ற மன்னார்குடியை சார்ந்த சந்தோஷ் அவர்களுக்கு அக்னி ஸ்டீல்ஸ் அரிமா K.தங்கவேல் கேடயம் ரூபாய் 10,000 ரொக்கமும் சுழற் கோப்பையும், இரண்டாம் பரிசு பெற்ற தஞ்சாவூர் கே.கிருஷ்ணன் அவர்களுக்கு வீனஸ் மார்க்கெட்டிங் கேடயம், ரூ.5,000 மற்றும் மூன்றாம் பரிசு வென்ற கிருஷ்ணகிரி மு.சந்தோஷ்குமார் அவர்களுக்கு சாரல் மினரல் வாட்டர் கேடயம் ரூ.3,000 மற்றும் போட்டியில் பங்கேற்ற மற்ற அனைவருக்கும் ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.






வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கிய முன்னாள் ஆளுநர் சிறந்த மேடைப் பேச்சாளர்களால் உலகில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களை பற்றி சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து 28 ஆண்டுகளாக சுப்ரீம் பேச்சாளன் சிறப்பாக நடைபெற தங்கள் மேலான பங்களிப்பை நல்கி வரும் அக்னி ஸ்டீல்ஸ் அரிமா K.தங்கவேலு, வீனஸ் மார்க்கெட்டிங் மற்றும் சாரல் மினரல் வாட்டர் ஆகிய நிறுவனங்களுக்கும், அரிமா S.சரவணன் நோட்டீஸ் விளம்பரம் வழங்கியமைக்கு நன்றி. சுப்ரீம் பேச்சாளன் போட்டி மிக சிறப்பாக நடைபெற ஆலோசனைகளை வழங்கிய PID, PDG மற்றும் உடன் பணியாற்றிய அனைத்து அரிமா நண்பர்களுக்கும் திட்டத் தலைவர்கள் அரிமா G.N.சித்தார்த்தன் மற்றும் அரிமா S.ஜெகநாதன் ஆகியோர் நன்றி பாராட்டினார்.

“நீண்ட நீண்ட காலம் நீர் நீடு வாழ வேண்டும்
வானம் தீண்டும் தூரம் நீர் வளர்ந்து வாழ வேண்டும்...”

## நவம்பர்

02 அரிமா D.பெரியசாமி
03 அரிமா C. அருண்குமார்
05 அரிமா K. விமல் குமார்
05 அரிமா Dr.R.S. நவீன் பாலாஜி
06 அரிமா M. ராமசாமி
07 அரிமா S. தனம் யோகானந்த்
07 அரிமா S.P. பிரசன்னா குமார்
08 அரிமா E. சரவணன்
10 அரிமா M. கார்த்திக்
11 அரிமா S. அசோகன்
12 அரிமா K. வேலுசாமி
16 அரிமா P. கதிர்வேலன்
18 அரிமா A. சுந்தரம்
19 அரிமா பூரவ் லோகினி அபிஷேக்
26 அரிமா Dr.K. மணி
26 அரிமா P. பூபதி
29 அரிமா R. யாசினி
29 அரிமா R. கோபாலகிருஷ்ணன்

## செப்டம்பர் மாதம் நன்கொடை வழங்கியவர்கள்

| | |
|---|---|
| அரிமா R. ஜீவா சித்தையன் | - ரூ. 1000 |
| அரிமா K.R. அசோக் | - ரூ. 500 |
| அரிமா K. பூபதி | - ரூ. 1000 |
| அரிமா M. ரமேஷ் | - ரூ. 500 |
| அரிமா CR. ஜெயக்குமார் | - ரூ. 1000 |
| அரிமா M.C. பாலமுருகன் | - ரூ. 1000 |
| அரிமா E. யுவராஜ் | - ரூ. 500 |
| அரிமா V.A. குணசேகரன் | - ரூ. 500 |
| அரிமா P.S. கார்த்திக்கேயன் | - ரூ. 500 |
| அரிமா S விஜய் | - ரூ. 500 |
| அரிமா S. லோகேஷ்குமார் | - ரூ. 500 |
| அரிமா S. கோகுல் | - ரூ. 500 |
| அரிமா K. கலைச்செல்வி | - ரூ. 500 |
| அரிமா J. தேவகி | - ரூ. 500 |
| அரிமா K. மோகனகிருஷ்ணன் | - ரூ. 500 |
| அரிமா S. பிரதீப் அகர்வால் | - ரூ. 500 |
| அரிமா S. சுகந்தி | - ரூ. 500 |
| அரிமா A. கவிதா | - ரூ. 500 |
| அரிமா S. ராஜாமாணிக்கம் | - ரூ. 500 |

## டிசம்பர்

01 அரிமா D. ஆர்த்தி
01 அரிமா A. மயில்வேல்
03 அரிமா K. சுகுமார்
06 அரிமா V.S. ராதை
06 அரிமா M. மாயாகிருஷ்ணன்
08 அரிமா M. சரண்யா
10 அரிமா P. புகழேந்தி
13 அரிமா P. தினேஷ்குமார்
14 அரிமா K.K. சுரேஷ் குமார்
15 அரிமா P. நாகராஜன்
15 அரிமா K. ஜோதி ராமலிங்கம்
17 அரிமா S. மகேஸ்வரன்
17 அரிமா S. சீவலட்சுமி
18 அரிமா R.R. சத்யமூர்த்தி
18 அரிமா S. வித்யா
20 அரிமா S. பாலகிருஷ்ணன்
20 அரிமா K. கலையரசன்
21 அரிமா Dr. பிரதீபா சுதாகர்
22 அரிமா A.S. செந்தில்நாதன்
22 அரிமா P. குணசேகரன்
23 அரிமா அக்னி K. தங்கவேல்
23 அரிமா P. மாணிக்கம்
25 அரிமா P. செல்வலதா
26 அரிமா S. சரவணன்குமார்
26 அரிமா Dr. சௌமியா அசோகன்
30 அரிமா K. தவமணி
31 அரிமா K. கலைச்செல்வன்
31 அரிமா அக்னி R. கிருஷ்ணமூர்த்தி
31 அரிமா Su. மஞ்சு ஸ்ரீ

## அக்டோபர் மாதம் நன்கொடை வழங்கியவர்கள்

| | |
|---|---|
| அரிமா D. நவநீதம் | - ரூ. 300 |
| அரிமா D. விக்னேஷ் | - ரூ. 500 |
| அரிமா S. கணேசன் | - ரூ. 500 |
| அரிமா M. தமிழரசி | - ரூ. 500 |
| அரிமா K. கணபதி | - ரூ. 500 |
| அரிமா P. வல்லரசு | - ரூ. 500 |
| அரிமா A. ரங்கசாமி | - ரூ. 505 |
| அரிமா A. விஜி அசோக்குமார் | - ரூ. 500 |
| அரிமா S. கார்த்திக்கேயன் | - ரூ. 500 |
| அரிமா E.S. சண்முகானந்த் | - ரூ. 1000 |



### புது விழியில்... புதிய விடியல்...

# கண்தானம்

உலக கண் தானத்தை முன்னிட்டு ஈரோடு அகர்வால் கண் மருத்துவமனை, நமது சங்கமும் இணைந்து கண்தான விழிப்புணர்வு பேரணியை 06.09.2022 அன்று நமது மாவட்ட ஆளுநர் அரிமா K.R.முத்தையா அவர்கள் துவக்கி வைத்தார். பேரணியில் கல்லூரி மாணவ மாணவி மருத்துவ செவிலியர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.







| தேதி | கண்தானம் கொடுத்தவர்கள் | கண்தானம் பெற உதவிய அரிமாக்கள் |
|---|---|---|
| 02.09.22 | திருமதி. S. திலகவதி | அரிமா M. தனசேகரன் |
| 09.09.22 | திரு. பூசப்பன் | அரிமா N. முருகேசன் |
| 21.09.22 | திருமதி. வள்ளியம்மாள் | அரிமா N. முருகேசன் |
| 23.09.22 | திருமதி. B.N. குமுதவல்லி | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 26.09.22 | திருமதி. பழனியாத்தாள் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 04.10.22 | திருமதி. சிவகாமி | அரிமா K. யுவராஜா |

| முதல் பரிசு | இரண்டாவது பரிசு | மூன்றாவது பரிசு |
|---|---|---|
| ரூ. 12,000/- | ரூ. 6,000/- | ரூ. 3,000/- |

அரிமா 324 E மாவட்டத்தில் நமது சங்கம் தொடர்ந்து கண் தானத்தில் முதலிடம் பெற்று வருகிறோம். இதற்கு கண் தானம் பெற உதவிய அனைத்து அரிமாக்கள் கண்தானக்குழுத் தலைவர் அரிமா சத்தியம்மூர்த்தி அவர்களுக்கும் இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். நமது இவ்வாண்டு கண்தான இலக்கு 100 ஜோடிகள். இலக்கினை அடைய அரிமாக்கள் அனைவரும் முயற்சி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் 18 ஜோடிகள் கண் தானமாக பெற்றுள்ளோம்.

# பன்னாட்டு கூட்டு மாவட்ட செய்திகள்.

அக்டோபர் 3-6 தேதிகளில் அமெரிக்கா மினியாபோலிஸில் நடைபெற்ற பன்னாட்டு இயக்குநர் கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு மாவட்ட Lions Quest திட்டத் தலைவராக முன்னாள் பன்னாட்டு இயக்குநர் K.தனபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டு மாவட்ட அளவிலான GAT LCIF Conclave பாண்டியில் அக்டோபர் 20–22 தேதிகளில் நடைபெற்றது. மூன்றாம் பன்னாட்டுத் தலைவர் A.P. சிங் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் சங்கத் தலைவராக பணியாற்ற தடை செய்வதைப்பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

குடும்ப உறுப்பினர், Leo lion உறுப்பினர் போன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சங்க வாக்களிப்பில் சேர்க்கப்படாது.

நூறு உறுப்பினர்கள் உள்ள சங்கத்தில் 20 பேர் குடும்ப உறுப்பினராக இருந்தால் சங்கத்திற்கு 8 வாக்குகளே கிடைக்கும். வருகிற பன்னாட்டு மாநாட்டில் தீர்மானம் கொண்டு வரப்படும்.

321 கூட்டு மாவட்டம் 2029ல் பன்னாட்டு மாநாட்டை இந்தியாவில் நடத்திட அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது.

40,000 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள கூட்டு மாவட்டத்திற்கு RLLI ல் மேலும் அதிகமான அரிமாக்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது 2023–24 ஆண்டிலிருந்து துவங்கும்.

2023 பன்னாட்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் அரிமாக்கள் உடனடியாக விசா பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் முதல் Lions Council of India கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

324E அரிமா மாவட்டத்தின் Guiding Lion Programe 04.09.22 அன்று சேலம் சிவராஜ் இன் ஹோட்டலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இன் நிகழ்வில் முன்னாள் தலைவர் அரிமா K.கலைச்செல்வி அவர்கள் நமது சங்கத்தின் சார்பாக கலந்து கொண்டு சிறப்பித்தார்

வசந்தம் மலரட்டும் ஆண்டில் மங்களபுரம் அரிமா சங்கம், ஆட்டையாம்பட்டி டெக்ஸ் சிட்டி அரிமா சங்கம், எவர்கிரீன் அரிமா சங்கம், ஆகிய 3 சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

வசந்தம் மலரட்டும் ஆண்டின் மாவட்ட ஆளுநரின் முதலாவது காலாண்டு விருது வழங்கும் விழா 16.10.22 அன்று நாமக்கல் பில்டர்ஸ் ஹாலில் நடைபெற்றது. நாம் முதலாவது காலாண்டு விருதினை பெற்றுள்ளோம்.

நமது சங்கத்தின் நாம் மண்டல சந்திப்பு 5.3.23 அன்று மண்டல தலைவர் PK.சரவணன் தலைமையில் நடைபெற இருக்கிறது.

Life 360° ‘வாழ்வில் வசந்தம்’ நிகழ்வு அக்டோபர் 28, 29, 30 ஆகிய தேதிகளில் கொடைக்கானல் ஹோட்டல் SV International ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பேச்சுக்கலை பயிற்சி நவம்பர் 7, 8, 9 ஆகிய தேதிகளில் கோவை ஆணைக்கட்டி KKID இல் நடைபெற்றது. நமது சங்கம் சார்பாக அரிமா V.ரவி, அரிமா P. கதிர்வேலவன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அமைதி ஓவியப் போட்டி ஈரோடு வருவாய் அரிமா மாவட்ட சங்கம் சார்பாக 11.11.2022 அன்று ஈரோடு BVB பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் 1956 குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.

Business Excellency Training Avenue (BETA) தொழில்முனைவோருக்கான பயிற்சி நவம்பர் 18, 19, 20 ஆகிய தேதிகளில் சேலம் சிவராஜ் ஹோட்டலில் நடைபெறுகிறது.

# மகிழ்ச்சி மத்தாப்புடன் மற்றும் இனிப்புடன் தித்திக்கும் தீபாவளி
## பொருளீட்டுத் திட்டம்

‘பெரிதினும் பெரிது கேள்’ என்ற பாரதியின் உத்வேக வார்த்தையின் படி இரண்டாவது முறையாக நமது சங்கமும் சிவகாசி அய்யன் பட்டாசு நிறுவனம் இணைந்து 17.10.22 அன்று தீபாவளியை முன்னிட்டு பட்டாசு அரங்கம் அமைக்கப்பட்டது. நமது மாவட்ட ஆளுநர் பெருந்தகை அரிமா முத்தையா அவர்கள் பட்டாசு அரங்கை திறந்து வைத்தார். முதல் விற்பனையை திமுக ஈரோடு மாநகர செயலாளர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

முதல் விற்பனையை மாநில கொங்கு வேளாளர் கவுண்டர் பேரவை தலைவர் திரு.மணிக்கவுண்டர் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

பொருளீட்டு திட்டமான பட்டாசு விற்பனையை மிகவும் சிறப்பாக ஏற்பாடுகளை செய்து கொடுத்த இரண்டாம் உதவி தலைவர் அரிமா அசோக்குமார், மூன்றாம் உதவித் தலைவர் ரமேஷ்குமார் ஆகியோருக்கு இதழின் மூலம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். பட்டாசு அரங்கில் சேவையாற்றிய அனைவருக்கும் இதழின் மூலம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர் முயற்சியினால் கடந்த 10 ஆண்டுகளாக நமது சங்கமும் மணிக்கூண்டு அகர்வால் ஸ்வீட் நிறுவனத்துடன் இணைந்து 20.10.22 அன்று தீபாவளி முன்னிட்டு இனிப்பு விற்பனை அரங்கு அமைக்கப்பட்டது.

ஈரோடு மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் திருமதி.நாகரத்தினம் அவர்கள் விற்பனை ஸ்டாலை திறந்து வைத்தார். முதல் விற்பனையை பட்டயத் தலைவர் அரிமா குமாரசாமி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

பொருளீட்டு திட்டமான இனிப்பு விற்பனையை மிகவும் சிறப்பாக ஏற்பாடுகளை செய்து கொடுத்த முதல் உதவி தலைவர் அரிமா பாலசுப்பிரமணியம், திட்டத் துணைத் தலைவர் அரிமா ரங்கசாமி ஆகியோருக்கு இதழின் மூலம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 4 நாட்களாக விற்பனை அரங்கில் சேவையாற்றிய பெண் அரிமா உறுப்பினர்கள் மற்றும் அரிமாக்களுக்கு இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.





# கண்களால் கைது செய்

## கிராம ஏற்புத்திட்டம் – ஆளுநரின் திட்டம்

நமது சங்கமும் ஒளிரும் காளமங்கலம் பவுண்டேஷன் இணைந்து கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.3,41,236.00 செலவில் 40 சிசிடிவி கண்காணிப்பு கேமராவை நமது மாவட்ட ஆளுநர் பெருந்தகை அரிமா K.R.முத்தையா அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.



முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா D.ரவிச்சந்திரன் மண்டல தலைவர் அரிமா P.K.சரவணன் கல்வியாளர் திரு.சண்முகம் கணபதிபாளையம் ஊராட்சி தலைவர் திருமதி.பத்மாவதி வீரமணி ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.ஜோதிமணி சரவணன் ஊராட்சித் துணைத் தலைவர் தமிழ்ச்செல்வன் தலைமையாசிரியர் ராசமணிக்கம் ஆகியோர் ஏற்புரை வழங்கி சிறப்பித்தார்கள்.



கணபதிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி கட்டிட கமிட்டி தலைவர் திரு.ராஜேந்திரன் வட்டாரத் தலைவர் அரிமா ஆனந்தன், அரிமா செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.




சிகப்பு கம்பளம் மற்றும் பேண்ட் வாத்தியத்துடன் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் பள்ளி மாணவர்கள் வரவேற்றனர். இவ்விழாவில் ஆசிரியர்கள், ஆசிரியைகள், ஊர்ப் பொதுமக்கள் மாணவ மாணவிகள், அரிமா உறுப்பினர்கள், இயக்குனர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




திறப்பு விழாவை மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த திட்டத் தலைவர் அரிமா V.செந்தில்குமார் அவர்களுக்கு இதழின் மூலம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# மலையரசி மடியில்
## குடும்பத்தோடு குதூகலம்

சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கூடி பரஸ்பர நம்பிக்கை வளர்த்துக் கொள்ளவும் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆவதற்கு குடும்பத்தோடு கலந்து கொள்ளும் நிகழ்வு 11.09.22 அன்று அதிகாலை 5.30 மணிக்கு KPK பெட்ரோல் பங்கில் இருந்து குடும்பத்தோடு ரம்மியமான இயற்கை சூழலில் ஏற்காட்டில் உள்ள அரிமா சங்கத்தின் தலைமை பண்பு பயிலரங்க கட்டிடத்தில் குடும்பத்தோடு குதூகலம் நடைபெற்றது.

நிகழ்ச்சி தொகுப்பாளர், ஜேசி.சண்முகசேகர் அவர்களின் நேரம் செல்லுவதே தெரியாமல் குழந்தைகள் முதல் பெரியவர் வரை விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், பாட்டுக்கு பாட்டு நடைபெற்றது. சங்கத்தின் நாடகக் குழுவினர் மிகச் சிறப்பாக 2 நாடகத்தை அரங்கேற்றினார்கள். குழந்தைகள் முதல் பெரியவர் வரை ஆடல் பாடலுடன் இனிதே குடும்பத்தோடு குதூகலம் நிகழ்ச்சி நடைபெற்றது.

காலை காபி வழங்கிய முன்னாள் தலைவர் அரிமா ஸ்பிக்.P.ராஜேந்திரன் அவர்களுக்கும், ஏற்காடு செல்வதற்கு பஸ் வழங்கிய அரிமா V.செந்தில்குமார் அவர்களுக்கும், வேன் வழங்கிய முன்னாள் தலைவர் அரிமா S.பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தோடு குதூகலம் மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்த திட்டத் தலைவர் அரிமா P.மாணிக்கம் அவர்களுக்கும், திட்டத் துணைத் தலைவர் அரிமா S.ஜெகநாதன் அவர்களுக்கும் பச்சை, ஆரஞ்சு, ப்ளூ, சிகப்பு, மஞ்சள், ரோஸ், ஆகிய குழு தலைவர்கள், உதவி குழுத் தலைவர் ஆகியோருக்கு இதழின் மூலம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.










# இளம் அரிமா சங்கப் பதவியேற்பு விழா



நம்ம சங்கத்தின் சார்பாக விஜடி இன்ஸ்டிட்யூட் ஆஃப் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளம் அரிமா சங்க பதவியேற்பு விழா 17.09.22 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுப்ரீம் சங்கத் தலைவர் அரிமா ராமசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.



புதிய இளம் அரிமா சங்க பொறுப்பாளர்களை முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா சந்திரசேகரன் அவர்கள் பதவியில் அமர்த்தி சிறப்புரை ஆற்றினார். புதிய தலைவர் லியோ முகேஷ் அவர்கள் ஏற்புரை வழங்கினார். மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் அவர்கள் புதிய இளம் அரிமா சங்க உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வைத்து உரையாற்றினார்.



லியோ சங்க மாவட்டத் தலைவர் அரிமா பழனியாண்டி அவர்கள் கல்லூரி முதல்வர் டாக்டர் சரவணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். செயலர் லியோ வினோபாலா அவர்கள் நன்றியுரை கூறினார்.

# ஓரியண்டேசன்



நம் சங்கத்தின் புதிய உறுப்பினர்களுக்கான அறிமுக பயிற்சி வகுப்பு 08.09.2022 அன்று நடைபெற்றது. அரிமா பயிற்றுனர் அரிமா டாக்டர் கே.தமிழ்ச்செல்வன் அவர்கள் உலகளாவிய பன்னாட்டு அரிமா இயக்கத்தின் வரலாறு, இயக்கம் ஆற்றி வரும் சேவைகள், பெருமைமிகு 324E மாவட்டத்தின் அமைச்சரவை அமைப்புகள், ஆளுநரின் கனவுத் திட்டம், உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை POWERPOINT மூலம் புதிய உறுப்பினர்களுக்கு கூறி பயிற்சி அளித்தார்.



வட்டாரத் தலைவர் அரிமா P.ஆனந்தன் அவர்கள் தன்னுடைய அனுபவங்களை எடுத்துரைத்தார். மண்டல தலைவர் அரிமா P.K.சரவணன் ஆகியோர் நமது சங்கத்தின் செயல்பாடுகளை பற்றி அரிமாக்களுக்கு விளக்கினார். திட்டத் தலைவர் அரிமா K.ஆறுமுகம், திட்ட துணைத் தலைவர் அரிமா K.சுந்தர பாண்டியன் ஆகியோர் ஓரியண்டேசன் பயிற்சி வகுப்பு ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்தமைக்கு இதழின் மூலம் நன்றிகள்.

# நலம்.. நலம் அறிய

அஜீரணம் ஏற்பட பல காரணிகள் உண்டு. காரமான உணவு, சாப்பிட்டவுடன் படுப்பது, மன இருக்கம், பதற்றம், மது அருந்துதல், புகைபிடித்தல் ஆகியவை அஜீரணம் ஏற்பட காரணிகளாக உள்ளன. இரைப்பைப் புற்றுநோய் (Stomach Cancer), இரைப்பை அழற்சி (Gastritis), குடற்புண் (Peptic Ulcers), பித்தப்பைக் கல் (Gallstones), கணையஅழற்சி (Pancreatis) ஆகியநோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அஜீரணம் ஏற்பட வாய்ப்புள்ளது.

## அஜீரணத்திற்கான அறிகுறிகள்

- வாய் குமட்டுதல்
- வாய் துர்நாற்றம்
- வயிற்று வலி
- நெஞ்செரிச்சல்
- வாய் புளித்தல்
- வயிற்றுப்போக்கு
- பசியின்மை
- வாயு தொல்லை &
- வயிறு உப்புசம்

## அஜீரணத்தை குணமாக்க வீட்டு வைத்தியம்

**நெல்லிக்காய் :** நாளுக்கு ஒருமுறை நெல்லிக்காய் சாப்பிட்டு வர அஜீரண கோளாறு நீங்கும்.

**பெருஞ்சீரகம் :** இரைப்பை நீர் சுரக்க பெருஞ்சீரகம் உதவும். பெருஞ்சீரகத்தை அப்படியே சாப்பிடலாம் அல்லது நீருடன் கலந்து சாப்பிடலாம்.

**சமையல் சோடா :** வயிற்று அமிலத்தை சமன் செய்ய சமையல் சோடா உதவும். சமையல் சோடா மற்றும் நெஞ்செரிச்சலுக்கு அஜீரணம் மற்றும் நெஞ்செரிச்சலுக்கு நிவாரணம் தரும். நாளுக்கு ஒருமுறை ஒரு டேபிள் ஸ்பூன் சமையல் சோடாவை தண்ணீர் அல்லது தேனில் கலந்து சாப்பிடலாம்.

**தேன் :** பாக்டீரியாக்கள் உற்பத்தியை தடுப்பதன் மூலம் அஜீரணத்தை குணப்படுத்த தேன் உதவும். தேனை அப்படியே சாப்பிடலாம் அல்லது வெதுவெதுப்பான நீரில் கலந்து சாப்பிடலாம்.

**எலுமிச்சை:** சாப்பிட்ட பிறகு எலுமிச்சை ஜீஸ் குடித்தால் வயிற்றெரிச்சல் மற்றும் வயிற்று வலி குறையும்.

**புதினா :** குடல் தசைகளை மிருதுவாக்க புதினா உதவுவதுடன் வாய் துர்நாற்றத்தை நீக்கும், வாய் குமட்டுதலை குணமாக்கும். சாப்பிட்ட பிறகு புதினா இலைகள் அல்லது புதினா தேநீர் பருகலாம்.

**இஞ்சி :** உணவுடன் இஞ்சி சேர்த்துக் கொள்ளலாம் அல்லது இஞ்சி தேநீர் அருந்தலாம். இஞ்சியில் ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த உதவும். இஞ்சியில் வலி மற்றும் அழற்சியை குணப்படுத்தும் தன்மை உள்ளது.

**இலவங்கப்பட்டை :** ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த இலவங்கப்பட்டை உதவும். இதனை அப்படியே சாப்பிடலாம் அல்லது தேநீரில் கலந்து நாளுக்கு 2-3 முறை அருந்தலாம்.

# தெரிந்ததும் தெரியாததும்

## கண்ணீர்

பிறந்த குழந்தை 3 மாதங்கள் சென்ற பிறகுதான் அழும்போது கண்ணில் இருந்து கண்ணீர் வரும். அதற்கு முன் அழும்போது கண்ணீர் வராது.

## ரூபாய் நோட்டுகள்

இங்கிலாந்து நாடுதான் உலகில் முதன் முதலாக வங்கி ரூபாய் நோட்டுக்களை வெளியிட்டது. வங்கியின் பெயர் – பேங்க் ஆப் இங்கிலாந்து.

## கண் இமைத்தல்

ஒரு மனிதர் தன் வாழ்நாளில் சுமார் 250 மில்லியன் தடவைகள் கண்ணிமைக்கிறார். அதாவது சராசரியாக ஆறு வினாடிக்கு ஒரு முறை இமைக்கிறார் என்று தெரிகிறது.

## ஒலிம்பிக்

1896 – ஆம் ஆண்டு ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற முதல் ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் ஒன்பது நாடுகள் மட்டுமே பங்கேற்றன.



## டூத்பிரஷ்

உலக அளவில் பல் துலக்க நீலம், சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பச்சை வண்ண டூத் பிரஷ்ஷைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் நீலநிற பிரஷைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

## பழைய நூல்

இந்தியாவைப் பற்றி மிகப்பழங்காலத்தில் எழுதப்பட்ட நூல் இண்டிகா. இதனை எழுதியவர் மெகஸ்தனிஸ், இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்தவர்.

## சூரியன்

சூரியனைப் பூமி மணிக்கு 66600 கி.மீ. வேகத்தில் சுற்றுகிறது.

## ஆந்தை

பறவைகளில் ஆந்தையால் மட்டுமே நீல நிறத்தைப் பார்க்கமுடியும். இரவு நேரத்தில் மட்டுமே ஆந்தைக்கு கண்விழிகள் விரிவடையும்.

## ஈசல்கள்

1500 ஈசல் இனங்கள் உள்ளன. சாதாரணமாக 1.5 செ.மீ. நீளமிருக்கும்.

## டென்னிஸ் பந்து

டென்னிஸ் பந்து வெள்ளை மற்றும் மஞ்சள் நிறத்தில் இருந்தால் விளையாட அனுமதிக்கப்படுவார்கள்.

## மொழி

உலகிலேயே மிகக்குறைவாக எழுத்துக்களைக் கொண்ட மொழி ஹவாய் என்ற மொழி. மொத்த எழுத்துக்கள் 12.

## கொசுக்கள்

கொசுக்களில் 2426 வகைகள் உள்ளன.

## சைக்கிள் உற்பத்தி

உலகிலேயே அதிக அளவு சைக்கிள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஹீரோ சைக்கிள் நிறுவனம் தான்.

# வித்தியாசம் வெற்றி தரும்

எந்தவொரு தொழிலாக இருந்தாலும் சரி, அதை எந்த அளவுக்கு நாம் வித்தியாசமாகச் செய்கிறோம் என்பதைப் பொறுத்தே அந்தத் தொழிலில் நம் வெற்றி இருக்கும். ஒரு ஸ்வீட் ஸ்டாலுக்குப் போகிறீர்கள். இனிப்பு, கார வகைகள் ஒவ்வொன்றும் சுவையாக இருக்கிறது. தரத்தில் வித்தியாசம் இருப்பதை உடனே புரிந்துகொள்கிறீர்கள்.

அந்த ஸ்வீட் ஸ்டாலில் உட்கார இடம், ஏசி, மெல்லிய இசை, அனுசரணையான கவனிப்பு என்று வாடிக்கையாளர் சேவை பிரமாதமாக இருக்கிறது. சூழலில் அவர்கள் வித்தியாசம் காட்டி இருப்பதை உடனே புரிந்து கொள்கிறீர்கள். இதற்கு ஒரு நல்ல உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், கிருஷ்ணா ஸ்வீட்ஸை சொல்லலாம்.

இன்னொரு ஸ்வீட் கடை ரோட்டை ஒட்டிய கடை என்பதால், உட்காரவெல்லாம் இடம் கிடையாது. விலை, தரம் ஆகிய விஷயங்களில் சாதாரணம் என்பதால், அந்தக் கடை நம் மனதில் இடம்பிடிக்காமலே போய்விடும். ஏதாவது ஒரு விஷயத்தில் உங்கள் பிசினஸை நீங்கள் வித்தியாசமாகச் செய்தால் தான். வாடிக்கையாளர்கள் உங்களைக் கவனிக்கத் தொடங்குவார்கள். உங்களைத் தேடி மீண்டும் மீண்டும் வருவார்கள்..

இப்படி நீங்கள் காட்டும் வித்தியாசமானது வாடிக்கை யாளர்களுக்குத் தேவையானதாக இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு கார் நிறுவனம், 'எங்கள் காரில் கூடுதல் குளுமை (extra chilling) கிடைக்கும்; குழந்தைகள் காரில் இருக்கும் போது கதவை மூடிக் கொண்டால் எளிதில் திறப்பதற்கு 'சைல்டு லாக்' வைத்திருக்கிறோம்' என்று பத்து வகையான வித்தியாசங்களைக் காட்டுவதாக வைத்துக் கொள்வோம்.

இந்த வித்தியாசங்கள் வாடிக்கை யாளர்களுக்கு அவசியம் தேவையா என்பதைப் பார்க்க வேண்டும். சிலர், கூடுதல் குளுமை தேவை இல்லை என்பார்கள். சிலர், என் வீட்டில் குழந்தையே இல்லை. எனக்கெதற்கு சைல்டு லாக் என்பார்கள். இப்படி ஒவ்வொரு வித்தியாசத்தையும் பல வாடிக்கையாளர்கள் ஒதுக்கிவிடும் போது, அந்த விற்பனை டல்லடிக்கத் தொடங்கிவிடுகிறது.

காரை பொறுத்தவரை, ஒரு வாடிக்கையாளர் முக்கியமாக எதிர்பார்க்கும் வித்தியாசம் என்ன? அந்த கார் எந்த அளவுக்கு மைலேஜ் தரும் என்பதைத்தான். ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ஒரு கார் 10 கி.மீ தருகிறது எனில், இந்த கார் 14 கி.மீட்டர் தரும் என்றால் அது வித்தியாசம்தான். லேட்டஸ்ட் வசதிகளுடன் கூடிய ஒரு கார் 6 லட்சம் ரூபாய்க்குக் கிடைக்கிறது எனில், அதே வசதிகளுடன் கூடிய இன்னொரு கார் 5 லட்சம் ரூபாய்தான் என்றால், அது வித்தியாசம். மாருதி நிறுவனம் தனது தொடக்கக் காலத்தில் இதைத் தான் செய்தது. அதிக மைலேஜ், குறைந்த விலை என்கிற வித்தியாசத்தைச் சரியாகக் காட்டியதன் விளைவு தான், இன்றைக்கும் கார் சந்தையில் 60 சதவீத பங்களிப்பை வைத்து கொண்டிருக்கிறது.

வித்தியாசம் வெற்றி தரும் என்பதற்கு எனது தொழில் அனுபவத்தையே உதாரணமாகச் சொல்கிறேன். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் சலூன் பிசினஸில் இறங்கினோம். எங்களது நிறுவனமோ கேசப் பாதுகாப்புத் தொடர்பான பொருட்களைத் தயாரிக்கும் ஓர் உற்பத்தி நிறுவனம். ஆனால், சலூன் என்பதோ சர்வீஸ் பிசினஸ், வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக சர்வீஸ் செய்வது என்பதுஎங்களுக்குப் புதிய அனுபவம். எனவே, அந்தத் தொழிலில் இறங்கலாமா, வேண்டாமா என்று தீவிரமாக யோசித்து, மார்க்கெட்டை ஆராய்ந்தோம்.

சலூன் பிசினஸில் இறங்குவதால், நாங்கள் தயாரிக்கிற சில உயர்தரமான பொருட்களை வாடிக்கையாளர்களிடம் நேரடியாக விற்க முடியும். இதனால் எங்களுக்குக் கூடுதல் லாபம் கிடைக்கும். எனவே, இந்தத் தொழிலில் தைரியமாக இறங்கலாம் என்று முடிவெடுத்தோம்.

நம் ஊரில் அழுகுக்கலை நிலையங்களோ அல்லது முடிவெட்டும் சலூன் கடைகளோ புதிய விஷயமல்ல. தெருவுக்குத் தெரு சலூன் கடைகள் இருக்கவே செய்கின்றன. அதே மாதிரியான சலூன் கடைகளை நாமும் திறந்தால், நம்மைத் தேடி யாரும் வரமாட்டார்கள். நம் அணுகுமுறை வித்தியாசமாக இருந்தால் தான் நம்மைத் தேடி வருவார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, வித்தியாசமான ஐந்து வகை மாடல்களை உருவாக்கி, சோதனை அடிப்படையில் ஒரே நேரத்தில் செய்து பார்த்தோம்.

முதலாவதாக, எந்தவொரு வித்தியாசமும் இல்லாமல் சாதாரண சலூன் போல, ஒரு அழகுக்கலை நிலையத்தை ஆண்களுக்காகத் தொடங்கினோம். அதேபோல, எந்தவொரு வித்தியாசமும் இல்லாமல் சாதாரண அழகுக் கலை நிலையத்தைப் பெண்களுக்காக அமைத் தோம். மூன்றாவதாக, ஏசி வசதியுடன் கூடிய, ஆனால் குறைந்த கட்டணம் வசூலிக்கிற மாதிரி ஒரு சலூன் கடையைத் தொடங்கினோம். நான்காவதாக, விஸ்தாரமான இடம், உள்ளே அருமையான அலங்கார வேலைபாடுகள், ஏசி வசதி, ஆண்கள், பெண்களுக்குத் (குழந்தைகளுக்கும்) தனித்தனி சேவை, நடுத்தரக் கட்டணம் என்கிற மாதிரி ஒரு கடையைத் திறந்தோம். சூப்பரான அலங்கார வேலைபாடுகள், அருமையான ஏசி வசதி, கட்டணம் கொஞ்சம் அதிகம் என்கிற மாதிரி ஐந்தாவதாக ஒரு கடையைத் திறந்தோம்.

இதில் எந்த மாடல் வெற்றி பெற்றது தெரியுமா? முதல் இரண்டு மாடலில் எந்த வித்தியாசமும் இல்லாததால். வாடிக்கையாளர்களின் கவனம் பெரிய அளவில் கிடைக்க வில்லை. மூன்றாவது மாடலில் ஏசி வசதி, குறைந்த கட்டணம் என்பதால், லாபத்துக்கு வழி இல்லாமல் இருந்தது. நான்காவது மாடல் மொத்த குடும்பத்துக்கானது என்பதால். வாடிக்கையாளர்களின் கவனத்தை உடனே ஈர்த்தது. ஐந்தாவது மாடலானது, வசதி வாய்ப்புள்ளவர்களுக்கு மட்டுமே என்பதால். அந்தப் பிரிவினரின் கவனத்துக்கும் உடனே போனது.

எனவே, முதல் மூன்று மாடல்களுக்கான கடைகளை மூடிவிட்டு, நான்காவது மாடல் வித்தியாசமாக இருந்ததால், அதை 'கிரீன் டிரென்ட்ஸ்' என்கிற பெயரிலும், ஐந்தாவது மாடல் பிரீமியம் பிராண்டாக 'லைம் லைட்ஸ்' என்கிற பெயரிலும் நாங்கள் நடத்தி வருகிறோம். இன்றைக்கு 'கிரீன் ட்ரென்ட்ஸ்' சென்னை போன்ற பெரிய நகரத்தைத் தவிர, மதுரை, நாமக்கல் என எந்த நகரத்தில் தொடங்கினாலும் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பையே பெறுகிறது.

ஆக, நீங்கள் எந்தத் தொழில் செய்வதாக இருந்தாலும், அதை எந்த அளவுக்கு வித்தியாசமாகச் செய்ய முடியும் என்பதைப் பாருங்கள். தொழிலில் வித்தியாசம் காட்டுவது என்பதற்கு வானமே எல்லை. இதை நீங்கள் வேறு எங்கும் சென்று படிக்க வேண்டாம். எந்தெந்த வகையில் கூடுதல் சேவைகள் அளித்தால், வாடிக்கையாளர்கள் இன்னும் அதிக மகிழ்ச்சி அடைவார்கள் என்பதைப் புரிந்துகொண்டுஇதற்காக செயல்படுத்தினாலே போதும். நிறையச் செலவுஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. இதனால் கிடைக்கும் வருமானம் உங்களுக்கு அதிகமாக இருக்கும். நிறைய வருமானம் பெறத்தானே பிசினஸ் செய்ய வந்திருக்கிறோம். பிறகு அதில் கவனம் செலுத்தாமல் இருக்கலாமா?



# Nothing Can Beat Persistence

You must have heard the old saying, 'with enough persistence we can accomplish anything', right? You can believe in this statement and refute it, at the same time. It may sound crazy, but it can be explained.

You can probably remember a time in your life, where no matter how hard you tried, wished and prayed for something, it just didn't happen as you expected, right? But, you see, if you can remain truly persistent, then, while you may not have had things turn out exactly as you had hoped, ultimately something came along to take its place. You see some things are not meant to be (that is as you expect them to be on the first attempt). But, if you can accept this, it is in your acceptance that you begin to notice the other things that are transforming in your life.

(You may have to look very carefully, but there is always something there to take its place).

These things are not always obvious to you, at the first glance. Often, it takes you to give some heavy thought and take the time to notice these things, but ultimately they are put in place just the same. Maybe, as a result, you found a new closeness among those that you loved. Perhaps, the missed opportunity led you to figure out a better way. You simply must remember the power that persistence plays in achieving the goals. And, keep firmly in mind that if you can go wholeheartedly towards things, some form of achievement will always be revealed to you!

# இதழாசிரியர் உரை

தம்பி தங்கச்சி அத்தை மாமா அக்கா அண்ணா சித்தி சித்தப்பா தாத்தா பாட்டி and my dear செல்ல குட்டிஸ் எல்லாருக்கும் வணக்கம். நான் P-R-A-B-H-U பிரபு. சுப்ரீம் இதழ் ஆசிரியரா, நம்ம LIONS SUPREME ல நடந்தவை, நடந்து கொண்டு இருப்பவை, நடக்க போவதை இந்த இதழ் மூலமா உங்களோட பகிர்ந்து கொள்வதில் ரொம்ப சந்தோஷம். இந்த இதழ் வெளிவரத்துக்கு பின்னாடி பல பேரோட உழைப்பு, நேரடியாகவும், மறைமுகமாகவும் இன்னும் நிறையா பேரு என் மேல இருக்க பாசத்துலையும் நம்ம இதழ் மேல இருக்குற அக்கறைலையும் நிறைய உதவி பண்ணிருக்காங்க, அவங்களுக்கும் HEARTY THANKS சொல்லிக்குறேன். என்னடா திடீர்னு ஒரே நன்றி மழை பொழியுதே னு யோசிக்க வேண்டாம். அப்போ அப்போ நன்றி சொல்றது நல்லது தான... infact நன்றி சொன்னா தான் நல்லது. (ஹி... ஹி... ஹி... life message தான் :). அப்புறம் ஒரு பெரிய வேண்டுகோள் நம்மளோட நிகழ்முறை கூட்டத்துக்கு விடாம அழைப்பு உங்களுக்கு வந்துட்டிருக்கும், உங்களை எல்லாம் நேர்ல சந்திக்கணும்னு ரொம்ப ஆசை, எல்லாரையும் பாத்து ரொம்ப நாள் ஆச்சு ல அதான். குடும்பத்தோட நம்ம கூட்டத்துக்கு வாங்களேன், எல்லாரையும் பாத்த மாதிரி இருக்கும்.

இது Personal Request :


உங்களுக்கு இந்த இதழ் பத்தியோ, நம்ம நிகழ்முறை கூட்டம் பத்தியோ எதாவது சொல்லணும், discuss பண்ணனும் அப்டினா RJ ERODE PRABHU ன்ற என்னோட சமூக வலைதளங்கள்ல சொல்லுங்க இல்லனா *9600201120* ன்ற என்னோட நம்பர் க்கு ஒரு Message பண்ணுங்க.. சரியா...

நானும் நல்லா இருக்கேன். நீங்களும் நல்லா இருங்க. நம்ம எல்லோருமே நல்லா இருப்போம், சந்தோசமா இருப்போம், ஆரோக்கியமா இருப்போம். டாட்டா...

இப்படிக்கு நான், நானே தான்.



அரிமா **J. ஆனந்த் பிரபு**
இதழாசிரியர்



THE Ceedee's GROUP

**Manufacturers of PP WOVEN FABRIC/SACKS for :**

- Cattle feed
- Poultry feed
- Feed Additives
- Tea
- Coffee
- Sugar
- Rice
- Fertilizers
- Cement
- Tile fixes
- PVC / UPVC Pipes
- Foam Mattresses
- Textiles
- Sago
- Oil Cakes

# Venbro Polymers

## ERODE 638 004

## Contact: 9443321809

## Mail: venbro@ceedees.com

## kn@ceedees.com

**OUR PRODUCTS**



























# THULASI READYMIX

கனவு மெய்ப்பட வேண்டும்...

Erode: 95 85 84 00 00
Salem: 97 86 35 00 00




## RR THULASI BUILDERS

Printed By : SPY Printers, Erode. 98427 29969